மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

61—

உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

***16406—திரு. கே.ஏ. பாண்டியன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, குமராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டபட்டினத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி குமராட்சி ஒன்றியம், ஜெயங்கொண்டபட்டினத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு. கே.ஏ. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுத்த காரியம் யாவினும் வெற்றி, எங்கு நோக்கினும் வெற்றி, எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி என்று வெற்றிமேல் வெற்றி பெற்று, வெற்றிப் பாதைக்கு எங்களை அழைத்துச் சென்ற அரசியல் வானின் அற்புதச் சுடரே, எங்களின் இதய தெய்வம், மாட்சிமை பொருந்திய மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்திரம் போல் சிரிப்பவரே, செந்தமிழின் தவப்பயனே, அக்னியில் நீராடி, அனுதினமும் போராடி, அம்மா தந்திட்ட ஆட்சி தீபத்தை சதிகார சகுனிகளிடமிருந்து அணையாமல் காப்பவராம், (மேசையைத் தட்டும் ஒலி) சேலத்தின் சிங்கம், மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களை பணிவன்போடு வணங்குகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வரோடு கரம் கோர்த்து பணியாற்றும் தூயமனம் கொண்டவராம், தமிழக துணை முதலமைச்சர் மாண்புமிகு அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட, குமராட்சி ஒன்றியத்தில் 57 ஊராட்சிகள் உள்ளன. அவற்றில் ஒன்றான ஜெயங்கொண்டபட்டினம் ஊராட்சியின் மொத்த மக்கள்தொகை சுமார் 1,732 ஆகும். இந்த ஊராட்சியைச் சுற்றியுள்ள இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். மேலும், இந்த ஊராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியும் உள்ளது. அதில் 500—க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். எனவே, இப்பகுதி மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, ஜெயங்கொண்டபட்டினம் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்திட வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து, இன்று முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருடன் நான் பேசியிருக்கிறேன். நம்முடைய தனியார் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் CSR fund மூலமாக அந்தப் பணிகளை இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.*

திரு.கே.ஏ.பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட, சிதம்பரம் நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைந்துள்ளது. சிதம்பரம் நகரைச் சுற்றியிருக்கும் இருபதுக்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த சுமார் 3,200—க்கும் மேற்பட்ட மாணவிகள் இங்கு கல்வி பயின்றுவருகின்றனர். இப்பள்ளியில் பயிலும் மாணவிகளின் விளையாட்டுத் திறன் மற்றும் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையில், இப்பள்ளி வளாகத்தில் ஓர் உடற்பயிற்சிக் கூடமும், மாணவிகள் அதிக எண்ணிக்கையில் படிப்பதால் ஏற்படும் இட நெருக்கடியைத் தவிர்க்கும் பொருட்டு, புதியதாக 15 வகுப்பறைகள் அடங்கிய கட்டடம் ஒன்றினையும் மாண்புமிகு அம்மாவின் அரசு கட்டித் தருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள*

2019 ஜூலை 9]

15 வகுப்பறைகளைக் கட்டுவதற்கான கருத்துருவை இந்த ஆண்டு நபார்டு திட்டத்திலே சேர்ப்பதற்கு அரசால் பரிந்துரை செய்யப்பட்டு, இந்த ஆண்டே அது இணைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உடற்பயிற்சிக் கூடத்தைப் பொறுத்தவரையில் பொறுத்திருந்துதான் பதிலளிக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் (திருமதி) பூங்கோதை அவர்கள்.*

டாக்டர் (திருமதி) பூங்கோதை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியிலுள்ள ஆலங்குளம் பேரூராட்சியில் கடந்த ஆண்டு ஒரு நூலகம் அமைத்திட உங்கள் துறையின் வாயிலாக 25 இலட்சம் ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. அந்த நிதி போதாது என்பதால் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் கொடுத்து, அங்கே ஒரு கட்டடத்தை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் தருவீர்கள் என்று எதிர்பார்த்து மேல்தளமும் போடச் சொல்லியுள்ளேன். இந்த வருடம் 50 இலட்சம் ரூபாய் தராவிட்டாலும், அரசு 30 இலட்சம் ரூபாயும், என்னுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 20 இலட்சம் ரூபாயும் சேர்த்து, ஒரு தரம் வாய்ந்த நூலகத்தை ஆலங்குளம் தொகுதியில் அமைக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். முக்கியமாக குழந்தைகளுக்கென தனி இடம்,* e–Library, e–books *எல்லாவற்றையும் மக்களோடு இணைந்த ஒரு கூட்டமைப்பு மூலமாகக் கொண்டுவருவதற்கு நாங்கள் முயற்சி செய்துகொண்டிருப்பதால், நீங்கள் நல்ல கட்டடத்தை வழங்கினால், அது உபயோகமாக இருக்கும். எனவே, கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்தைப் பொறுத்தவரையில், ஆலமரம்போல தழைக்க வேண்டுமென்பதால், நூலகம் வேண்டுமென்று நினைக்கிறீர்கள். அதற்காக நூலகத்தின் சார்பாக 25 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் செலவு செய்யுங்கள்.*

e–Library என்று சொல்லக்கூடிய புதிய திட்டங்களை அரசு கொண்டுவந்து கொண்டிருக்கிறது. அதன் மூலமாக நூலகத்திற்கு என்ன பணிகளை மேற்கொள்ள வேண்டுமோ, அந்தப் பணிகளை அரசு மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

62—

பகுதிநேர நியாய விலைக் கடை

***13417—திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் குடிக்காடு பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், கூவத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் கூவத்தூர்-1 முழுநேர நியாய விலைக் கடை 984 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டுவந்தது. இக்கடையிலிருந்து கூவத்தூர், குடிக்காடு பகுதியைச் சேர்ந்த 180 குடும்ப அட்டைகள் உட்பட 326 குடும்ப அட்டைகளைப் பிரித்து கே.என். குப்பத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. தற்போது கூவத்தூர் குடிக்காடு பகுதியில் மற்றொரு பகுதிநேர நியாய விலைக் கடை துவக்குவது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம் அவர்கள்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள்*